முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1066

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.08.2022, செவ்வாய்கிழமை

1. ஆறுமுக சக்தியே அரங்கா வாழ்க
ஆற்றல்மிகு ஞானமாக கலியுகத்தில் வந்து
மாறுதலை உலகோர்க்கு செய்யும் தவசியாக
மாதர்மமாக விளங்குகின்ற குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
ஆசி தனை சுபகிருது வேங்கை திங்கள்
(சுபகிருது வருடம் ஆவணி மாதம் 14 நாள், 30.08.2022 செவ்வாய்கிழமை)
ஆற்றல்பட உலகம் அரங்கனை அறிய உரைப்பேன்
3. உரைக்கவே மாதர்ம வழிகள் தன்னை
உலகம் ஏற்று வருதல் காண
குறைகள் எல்லாம் விலகி இந்த கலியுகத்தில்
குவலயம் பாதுகாப்பு மிக்க பூமியாக மாறும்
4. மாறுதலை தரும் அரங்கன் சன்மார்க்கமே
மக்களை தேற்றும் உயர் மார்க்கமாகும்
ஆறுதல் என்று உலகோர் அடிபணிந்து
அரங்கன்பால் சரணடைவு கொண்டு விட்டால்
5. கொண்டு விட உலகில் மக்களுக்கு
கூறிடுவேன் மரணத் துன்பமில்லை
தொண்டென அரங்கன் தர்மத்தில்
தொடர்ந்து சேவை ஆற்றி கலந்துவிட்டால்
6. கலந்துவிடும் மக்களுக்கு கலியுகத்தில்
கண்டுரைப்பேன் பசி பிணி பிறவி தொடருகின்ற
இடர்களெல்லாம் அணுகா அகன்றோடி
இனிதே ஞான வாழ்வாய் சிறந்து
7. சிறந்துமே அரங்கன் வழி உலகோரெல்லாம்
சித்திமிகு ஞானிகளாக உருவெடுத்து
உத்தமமாய் கலியுகத்தை ஞானயுகமாக
உலகமாற்றம் செய்யும் ஞானவான்களாக மாறுவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–